**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : C.C. 44/2008

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for Prosecution P.W.3

Defence

Court

Name : சோபியா ஜோசப்

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 3.8.2018

முதல் விசாரணை

நான் தற்போது சென்னையில் உதவி இயக்குநராக இயங்கும் தடய அறிவியல் ஆய்வகத்தில் அலகு 2 ல் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.7.2007 அன்று சிறப்பு மாவட்ட அமர்வு நீதிபதி இ.சி. மற்றும் என்டிபிஎஸ் ஆக்ட் வழக்குகள் மதுரை அவர்களிடம் இருந்து கடித எண். 1151, நாள் 23.7.2007 என்று குறிப்பிடப்பட்ட கடிதத்துடன் நீதிமன்ற முத்திரை சரியாகவும் மற்றும் முழுமையாகவும் மூடி முத்திரையிடப்பட்ட பொருட்கள் பெறப்பட்டு எமது ஆய்வகத்தில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது." NIB CID தேனி கு.எண். 115/07 பிரிவு 8(c)r/w18C of NDPS Act என்று லேபிள் எழுதி அச்சிடப்பட்டு இருந்த எஸ்.1 முதல் எஸ்.10 வரை இலக்கமிடப்பட்டிருந்த 10 காகித உறைகளில் ஒவ்வொன்றிலும் இருந்த பாலிதீன் உறையினுள் பிசுபிசுப்பான கருமை நிற மாதிரியின் நிகர எடை முறையே 4.960, 3.910, 4,960, 4.750, 4.660, 4.850, 4.850, 4.690, 4,460 மற்றும் 4,860 பகுப்பாய்வில் எஸ்.1 முதல் எஸ்.10 வரை இலக்கமிடப்பட்ட ஒவ்வொன்றிலும் மெக்கோனிக் அமிலம் மற்றும்

அபின் ஆல்கலைடுகள் ஆன மார்பின், கொடின், திபைன், பெப்பாவரின் மற்றும் நார்கோட்டின் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. மாதிரிகள் பத்திலும் அபின் (OPIUM) உள்ளது. அதன் பகுப்பாய்வு அறிக்கை போதைப்பொருள் எண். 126 /2007 நாள் 29.8.2007 ஆகும். பகுப்பாய்விற்காக மாதிரிகள் முழுவதும் முழுமையாக பயன்படுத்தப்பட்டன. ஆகவே வெற்று கட்டுப்பொருட்கள் இவ்வாய்வக முத்திரையுடன் கூடிய 10 காகித பொட்டலங்களில் திருப்பி அனுப்பப்பட்டன. கைப்பற்றப்பட்ட மாதிரி பொட்டலங்களை ஆய்வு செய்ய வேண்டி ஆய்வாளர் நீதிமன்றத்தின் மூலமாக கொடுத்த வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.21 ஆகும். மேற்படி பொருட்களை பகுப்பாய்வு செய்ய நீதிமன்றம் அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.22. நான் வழங்கிய பகுப்பாய்வு அறிக்கை அ.சா.ஆ.23 ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை

அ.சா-ஆ.21 கடிதத்தில் காவல் நிலைய மாதிரி முத்திரை பதித்து அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. ஆய்வாளர் கடிதத்தில் காவல்நிலைய மாதிரி முத்திரையை பதித்து அனுப்பினால் தான் மாதிரி பொட்டலங்களில் உள்ள காவல் நிலைய மாதிரி முத்திரையை நான் சரி பார்க்க முடியும் என்றால் நாங்கள் காவல்நிலைய மாதிரி முத்திரையை பரிசீலிப்பது இல்லை. நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்படும் சான்று பொருட்களில் நீதிமன்ற முத்திரை மட்டும் சரிப்பார்ப்போம். நான் எனது அறிக்கையில் காவல்நிலைய மாதிரி முத்திரை இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மாதிரி பொட்டலங்களை பெறும் போது அதை கொண்டு வரும் காவலரிடம் மாதிரி பொட்டலங்களை பெற்றுக்கொண்டதற்கான ரசீது கொடுப்போம் என்றால் சரிதான். மாதிரி பொட்டலங்களை போதைப்பொருட்கள் பிரிவில் பெறுவது வழக்கம் இல்லை. அதற்கு என்று தனிப்பட்ட முறையில் வரவேற்பு பிரிவு உள்ளது. அவர்களும் எங்கள் துறையை சேர்ந்தவர்கள் தான். நான் எனது அறிக்கையில் தலைமைக்காவலர் கணேசன் 2308 என்பவர் கொண்டு வந்து மாதிரி பொட்டலங்களை ஆய்வகத்தில் ஒப்படைத்ததாக நீதிமன்றத்தில் இருந்து வந்த கடிதத்தின் பார்த்து குறிப்பிட்டுள்ளேன். மாதிரி பொட்டலங்களில் உள்ள மாதிரிகளை நான் தான் எடைப்போட்டு எடையை குறிப்பிட்டுள்ளேன். எனதுஅறிக்கையில் காக்கி கவரில் இரண்டு பிளாஸ்டிக் உறை இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மாதிரி பொருட்களின் எடையை பிளாஸ்டிக் உறையோடு தான் எடை போட முடியும் என்றால் சரியல்ல. எனது ஆய்வு அறிக்கையில் பரிசோதனைக்கு வந்த மாதிரி பொட்டலங்களில் ஒட்டப்பட்டிருந்த லேபிளில் எதிரிகள் பெயர் மற்றும் சாட்சிகளின் பெயர் இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது அறிக்கையில் 10 மாதிரி பொட்டலங்களும் நூலால்

சுற்றப்பட்டிருந்தது என்று சொன்னால் சரியல்ல. எனது அறிக்கையில் 4 முறைகளில் பரிசோதித்து பார்த்ததாக குறிப்பிட்டுள்ளேன். விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். TLC முறையில் பரிசோதனை செய்யும் போது நாட்காட்டிக் பொருட்கள் மட்டும் கீழே படிந்து இருக்கும் என்றால் சரியல்ல. எந்த எந்த தேதியில் எந்த எந்த பரிசோதனை செய்யப்பட்டது என்று அறிக்கையில் சொல்லப்படளவில்லை என்றால் சரிதான். குவாண்டிடேட்டிவ் டெஸ்ட் குவாலிட்டி டெஸ்ட் என்று இரண்டு முறையில் சோதனை செய்வோம் என்றால் சரிதான். குவாலிட்டி டெஸ்ட் என்பது என்ன வகையான நார்காட்டிக் என்பதை கண்டறியும் சோதனை என்றால் சரிதான். குவாண்டிட்டிவ் டெஸ்ட் என்பது நார்காட்டிக் பொருள் எத்தனை சதவிகிதம் உள்ளது என்பதை கண்டறியும் சோதனை என்றால் சரிதான். ஆய்வாளர் வேண்டுகோள் கடிதத்தில் குவாண்டிடேட்டிவ் டெஸ்ட் செய்ய வேண்டுகோள் கடிதத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் எனது அறிக்கையில் குவாண்டிடேட்டிவ் டெஸ்ட் செய்து எத்தனை சதவிகிதம் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் அதற்கான போதுமான எடையுள்ள பொருள் மாதிரியாக அனுப்பவில்லை. அவ்வாறு நான் எனது அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். குவாண்டிடேட் டெஸ்ட் செய்யசொல்லி மீண்டும் ஆய்வாளரிடம் இருந்து வேண்டுகோள் கடிதம் வந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீண்ட நாட்கள் ஆனால் மேற்படி போதைப்பொருளின் வீரியம் குறைந்துவிடும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் குவாண்டிடேட்டிவ் டெஸ்ட் செய்தேன் என்றாலும் அது அரசு தரப்பிற்கு பாதகமாக இருந்ததால் அதை மறைத்து அறிக்கை அனுப்பி உள்ளேன் என்றாலும் சரியல்ல. ஒவ்வொரு முறைக்கும் எத்தனை கிராம் மாதிரி பொருட்களை உபயோகப்படுத்தினேன் என்று எனது அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் 3.10.2007 அன்று நீதிமன்றத்திற்கு அறிக்கை அனுப்பினேன். நான் வழங்கிய பகுப்பாய்வு அறிக்கை முழுமையான விபரங்கள் அடங்கிய பகுப்பாய்வு அறிக்கை அல்ல என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை- இல்லை.